**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR**

**SC.No. 396/2018**

**Deposition of : PW – 6 (Lw-5)**

**Name : சுப்பிரமணி** **Father Name :**

**Village :** **Taluk :**

**Nationality :** **Religion :**

**Calling :** **Age :**

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act 44 of 1969 Date: 12-06-2023 at 12.07 p.m to 12.22 p.m**

**எதிரிகள் 1 முதல் 6 வழக்கறிஞருடன் நீதிமன்றத்தில் ஆஜர். 7ம் எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 கு.வி.மு.ச ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது சதாசிவபுரம் வடக்கு காட்டுக்கொட்டாயில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு சம்பவம் நடந்த தேதி ஞாபகமில்லை. மணி என்பவர் வண்டியில் இருந்து வந்தார். என் சித்தப்பா ரத்தினம் போன் செய்தார். அவர் என்னை மணியை அழைத்துவருமாறு சொன்னார். மணி வீட்டு அருகே மாதேஸ் போயிக்கொண்டிருந்தார். அவர்களுக்குள் ஏற்கனவே பிரச்சனை இருந்தது. அப்போது மணியும், மாதேசும் பிரச்சனை ஏற்பட்டுக்கொண்டு அடித்துக்கொண்டார்கள், அப்போது துரைசாமி வந்துவிட்டார். அப்போதுதான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அதில் மணிக்கும் துரைசாமிக்கும் மண்டை உடைந்துவிட்டது. மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மணி, மாதேஸ் மற்றும் துரைசாமி. மேற்படி சண்டை செய்த நபர்களை வேண்டாம் என்று நான் பிடித்துக்கொண்டேன். நான் 1ம் எதிரியை பிடித்துக்கொண்டு எதுநாளும் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னேன். பிறகு 108க்கு போன் செய்து வாகனம் வந்தது. அதில் மணியையும் துரைசாமியையும் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளேன். அன்று இரவே 11 மணியளவில் மணி வீட்டருகே சத்தம் கேட்டது. என் சித்தப்பாவும் எனக்கு மறுபடியும் போன் செய்தார். நான் வந்து பார்த்தபோது மணியின் தந்தை ஈஸ்வரன் கிணற்றில் இருந்தார். தீயணைப்புத்துறையினர் வந்து அவரை காப்பாற்றினர்கள். பிறகு அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். என்னை காவல் துறையினர் விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>

புகார்தாரர் எனக்கு நெருங்கிய நண்பர். என்னுடைய வீட்டிற்கும் புகார் கொடுத்தவர் ஈஸ்வரன் வீட்டிற்கும் சுமார் 1/2 இருக்கும், ஆனால் சத்தம் போட்டால் கேட்கும். ஏற்கனவே 5ம் எதிரி துரைசாமி

என்பவர் கொடுத்த புகாரில் நானும் ஒரு எதிரி என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் கைது செய்யப்பட்டேன். தலைவாசல் காவல்நிலையத்தில் வைத்துதான் காவல் துறையினர் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார். புகார்தாரருக்கும் முதல் எதிரிக்கும் என்ன வரவு செலவு பிரச்சனை என்பது எனக்கு தெரியாது. நான் என்னுடைய போலிஸ் விசாரணையில் என் சித்தப்பா ரத்தினம் அழைத்ததாகவோ, அவர் விவரத்தை சொன்னதாகவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் 1ம் எதிரியை சம்பவத்தின் போது பிடித்துக்கொண்டு என்றும், புலன் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இரவு 11 மணிக்கு என் சித்தப்பா போன் செய்ததால்தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். மேற்படி கிணற்றில் இருந்த ஈஸ்வரனை நாங்கள் காப்பாற்ற முயற்சிக்கவில்லை என்றால் அதற்கு தீயணைப்பு துறையினர் வந்துவிட்டார்கள். மேற்படி புகார்தாரர் என் கூட்டாளி என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை.</u>**

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**SD/-K.Ananthan**
**ASSISTANT SESSIONS JUDGE,**
**Attur.**